**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 12-09-2023**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-09-12 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-09-13 | 2023-09-14 | 2023-09-15 | 2023-09-16 | 2023-09-17 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 2.0 | 2.0 | 3.0 | 3.0 | 4.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 36.0 | 36.0 | 35.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 28.0 | 27.0 | 27.0 | 26.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 70 | 60 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 30 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12 | 14 | 14 | 16 | 16 |
| காற்றின் திசை (கோணம்) | 250 | 250 | 250 | 270 | 270 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 7 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் ஐந்து நாட்களுக்கு மிக லேசான முதல் லேசான மழை பெய்யக்கூடும்; அடுத்த ஐந்து நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை 35.0°C-36.0.0°C ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26.0°C-28.0°C ஆகவும் இருக்கலாம்; காற்றின் ஈரப்பதம் 30-70% வரை எதிர்பார்க்கப்படுகிறது; காற்றின் வேகம் மணிக்கு 12.0-16.0 கி.மீ வரை இருக்கலாம்; காற்றின் திசை மேற்கு தென்மேற்கு முதல் மேற்கிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

17.09.2023 முதல் 23.09.2023 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு, குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பு நிலையில் பதிவாகக்கூடும்.

## குறுஞ்செய்தி :

வரும் நாட்களில் மிக லேசான முதல் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி தெளிக்கும் போது ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும்

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | 1.முதிர்ந்த பயிரை அறுவடை செய்யுங்கள்; 2.வரவிருக்கும் சம்பா பருவத்துக்கு நெல் நாற்றங்கால் தயார் செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது; 3.விதை நேர்த்தி- ஒரு கிலோ விதைக்கு/ பேசிலஸ் சப்டிலீஸ் 10 கிராம், ஒரு லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கலந்து இரவு முழுவதும் வைத்து, விதை நேர்த்தி செய்து பின் விதைப்பை மேற்கொள்ளலாம்; 4. தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 5.இலை சுருட்டுப்புழு- ஏக்கருக்கு அசிபேட் 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| நிலக்கடலை | நிலக்கடலையில் 1.துரு நோய் ஏற்படுவதற்கு சாதகமனா வானிலை உள்ளது. நோய்த்தாக்கத்தை உன்னிப்பாகக் கவனித்து, ஒரு ஏக்கருக்கு 400 கிராம் மான்கோசெப் அல்லது 400 கிராம் குளோரோதலோனில் அல்லது நனையும் கந்தகம் 1 கிலோ கிராம் வீதம் பரிந்துரைக்கப்படுகிறது. மேலும் நிலவும் வானிலை சூழலில் 2.சிவப்பு கம்பளி புழுவின் தாக்கம் காணப்பட்டால் i). நச்சு உணவு பொறி அமைத்து (10 கிலோ அரிசி தவுடு + 1 கிலோ பனங்கட்டி + 1 லிட்டர் குயினால்பாஸ்) அந்துப்பூச்சியை அழிக்கலாம்; ii).கார்பரில் அல்லது குயினால்பாஸ் இவற்றில் ஏதேனும் ஒரு தூளை எக்டர்க்கு 25 - 30 கிலோ வீதம் தூவி இளம் ரோமப்புழுவைக் கட்டுப்படுத்தலாம்; iii).குயினால்பாஸ் 1 லிட்டர் என்ற வீதம் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் வளர்ச்சியடைந்த ரோமப்புழுவின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம். |
| உளுந்து | உளுந்து பயிரில் தற்போது நிலவும் வானிலை காரணமாக சாம்பல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்நோயின் ஆரம்ப நிலை அறிகுறி தென்பட்டவுடன் 10 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை வீதம் வேப்ப விதை சாறு 5 சதம் அல்லது வேப்பெண்ணெய் 3 சதம் அல்லது தைல இலை சாறு 10 சதம் என்ற வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | 1.மிளகாயில் இலைப்புள்ளிகள் ஏற்படுவதற்கு சாதகமனா வானிலை உள்ளது. நோய்த்தாக்கத்தை உன்னிப்பாகக் கவனித்து, மேன்கோசெப் 0.25% அல்லது 0.1% குளோரோதளோனில் (கவாச்), 10 - 15 நாட்கள் இடைவெளி விட்டு இரு முறை தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது; 2. சாம்பல் நோய்- நோயின் அறிகுறி கண்டவுடன் 15 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை வீதம் நனையும் கந்தகம் (wettable sulphur) @ ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 கிராம் என்ற வீதம் அல்லது கார்பெண்டஸிம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் என்ற வீதம் கலந்து தெளிக்கலாம். |
| கத்திரிக்காய் | கத்தரியில் தற்போது நிலவும் வானிலை காரணமாக காய் துளைப்பான் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 5 சதம் அல்லது டைமெத்தோயேட் 30 % EC 10 லிட்டர் தண்ணீருக்கு 7 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும்.மற்றும் ப்ரைஸ்டோமரஸ் |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | டெஸ்டுசியஸ் மற்றும் செராமஸ்டஸ் பெலவோரிப்டெலில் ஒட்டுண்ணியைக் கொண்டு கட்டுப்படுத்தலாம். |
| மல்லி கை | மல்லிகை பயிரில் நிலவும் வானிலை காரணமாக பின்வரும் பூச்சி மற்றும் நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது; 1. மல்லிகை மொட்டு ஈ- ஏக்கருக்கு குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5 SC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5 மில்லி லிட்டர் என்ற வீதம் கலந்து தெளிக்கலாம். அல்லது ஏக்கருக்கு நோவலூரான் 10 EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3.0 மில்லி லிட்டர் என்ற வீதம் கலந்து தெளிக்கலாம்; 2. மொட்டுப்புழு- தியாகிளோபிரிட் 240 SC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி லிட்டர் என்ற வீதம் அல்லது ஸ்பினோஷாட் 45 SC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5 மில்லி லிட்டர் என்ற வீதம் தெளிக்கலாம்; 3.வேர் அழுகல்- டிரிஃப்ளோக்ஸிஸ்ட்ரோபின் + டெபுகோனசோல் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.75 கிராம் அல்லது டிஃபெனோகோனசோல் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5 மில்லி லிட்டர் கரைசலை செடியினைச் சுற்றி மண்ணில் ஊற்றவேண்டும். நல்ல வடிகால் வசதியுள்ள நிலங்களில் குண்டு மல்லியை பயிர் செய்வதன் மூலம் இந்நோய் வராமல் கட்டுப்படுத்தலாம். |